பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 02 2026** **12 40**

வியாழக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்

1. புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதோடு மட்டுமின்றி அதனை செயல்படுத்துவதிலும் இந்தியா முன்னிலையில் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வேளாண்துறை வளர்ச்சிக்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 22 பேர் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

4. நைஜீரியாவில் சுரங்கம் ஒன்றில் நேரிட்ட வெடிவிபத்தில் 33 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

5. **Mount Everest Taekwondo** போட்டியில் இந்தியாவின் **Rodali Verua** தங்கப்பதக்கம் வென்றார்.

... இனி விரிவான செய்திகள்...

<<<<>>>>

புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதோடு மட்டுமின்றி அதனை செயல்படுத்துவதிலும் இந்தியா முன்னிலையில் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தாக்கத்தின் உச்சிமாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த மாநாட்டை இந்தியா நடத்துவது வளரும் நாடுகளுக்கு கிடைத்த பெருமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மனிதகுலத்தில் பெரிய அளவு மாற்றத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கொண்டுவந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்பம் முறையாக பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாடு உதவிடும் என்றும் அவர் கூறினார்.

கருவிகளின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதிலும் இந்த தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

மேம்பாட்டிற்கான கருவியாக இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன், தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் இருப்பதாக கூறினார்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையிலும், டிஜிட்டல் சுகாதார அட்டைகளை வழங்குவதிலும் இந்தியா படைத்த சாதனைகளை திரு. இம்மானுவேல் மேக்ரோன் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரெஸ் பேசுகையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அனைவருக்குமானதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வளரும் நாடுகளுக்கு உதவும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிதியம் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஆண்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தினார்.

முன்னதாக வரவேற்புரையாற்றிய மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே பிரதமரின் தொலைநோக்கு பார்வையாகும் என்று குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப இயக்கத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தகவல் தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வேளாண்துறை வளர்ச்சிக்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுக்குள் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசின் திட்டங்களை மாநில அரசுகள் முழுமையாக செயல்படுத்துவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பிஹாரில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

இன்று **Begusarai-**யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஹார் அரசின் செயல்பாடுகள் குறித்து ராஷ்ட்ரிய ஜனதா தளம் வெளியிட்டுள்ள கருத்துகள் ஏற்புடையதல்ல என்றார்.

<<<<>>>>

தமிழ்த் தாத்தா என்று போற்றப்படும் உ.வே. சாமிநாத அய்யரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், பனை ஓலைச் சுவடிகளில் இருந்த சங்க இலக்கியங்களை பதிப்பித்து தமிழுக்கு புத்துயிர் அளித்தவர் சாமிநாத அய்யர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழ் மொழியின் தொன்மையும், பழங்கால நூல்களும் தற்போது பயன்பாட்டில் உள்ளதற்கும் அவரது நடவடிக்கைகளே காரணம் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

<<<<>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 22 பேர் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியதாக கூறி இவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Karthikeyan - 38 Sec)**

இதற்கிடையே, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில் இலங்கை கடற்படையினரால் ஏற்கனவே சிறைபிடிக்கப்பட்டு மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 11 பேர் விமானம் மூலம் இன்று சென்னை திரும்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Sureka - 35 Sec)**

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்துள்ளது.

இன்று சென்னையில் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலினை தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் சந்தித்து கூட்டணியில் இணைந்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. கேசவ் பிரசாத் மௌரியா கூறியுள்ளார்.

லக்னோவில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர், சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற்று வருவதாக கூறினார்.

<<<<>>>>

அமெரிக்கா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் **Coffee** தொழில்துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்று பெங்களூருவைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. ஸ்ரீகாந்த் ராவ் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், **Coffee** தொழிலில் கூடுதல் முதலீடுகளைப் பெற இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றார்.

ஏற்றுமதியை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்யும் என்றும் அவர் கூறினார்.

இதன் மூலம் விவசாயிகள் பெரிய அளவில் பயனடைவார்கள் என்றும் திரு. ஸ்ரீகாந்த் ராவ் தெரிவித்தார்.

<<<<>>>>

உலக அளவில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

இதன்படி உலக உணவு அமைப்பிற்கு 5 வருடத்திற்கு அரிசி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய உணவுக் கழகம் கையெழுத்திட்டுள்ளது.

குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் விலையில் அரிசி வழங்குவதற்கான அம்சம் இந்த ஒப்ந்தத்தில இடம்பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரான் - ரஷ்யா இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி இன்று தொடங்கியது.

ஓமன் வளைகுடா மற்றும் வடக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் இந்தப் பயிற்சி தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இரு நாடுகளும் இணைந்து இந்த பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் - ரஷ்யா இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி இன்று தொடங்கியது.

ஓமன் வளைகுடா மற்றும் வடக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் இந்தப் பயிற்சி தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இரு நாடுகளும் இணைந்து இந்த பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

Mount Everest Taekwondo போட்டியில் இந்தியாவின் Rodali Verua தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 73 கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

--------------

சிங்கப்பூர் ஸ்மாஷ் டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஆகாஷ் பால் 8-11, 13-11, 11-7, 6-11, 11-7 என்ற செட் கணக்கில் ஈரானின் Benyamin Faraji-ஐ வென்றார்.

<<<<The End>>>>